**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கூட்டுறவுத் தணிக்கைத் துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி.தி.எழில்சிந்து அவர்கள் சென்னை மண்டலம் கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் 09.10.2019 முற்பகல் முதல் அவரின் பணியினை வரன்முறை (Regularization) செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நிதி(கூட்டுறவுத் தணிக்கை)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.322** 003620 **நாள் : 06 .11.2023**
சோபகிருது – ஐப்பசி–20
திருவள்ளுவர் ஆண்டு –2054

1552/2019

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.61 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.19.07.2006.
2. அரசாணை (நிலை) எண்.42 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள்.12.03.2007.
3. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.எண்.6920 / 2018 / அபஅ.3, நாள் 03.10.2019.
4. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கடித ந.கஎண்.6920/2018/அபஅ.3, நாள் 01.10.2020, 26.09.2022, 17.10.2022 மற்றும் 25.04.2023.
5. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ.1)த் துறை, நாள் 08.03.2023.
6. அரசு கடித எண்.5532/ மனிதவள மேலாண்மை (ஜி2)த்துறை / 2023 –1, நாள் 20.09.2023.

.....

**ஆணை;**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

அ) திருவள்ளூர் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் பணிபுரிந்தபோது பணியிடையில் 29.09.2004 அன்று இயற்கை எய்திய திரு.ஜி.தியாகராஜன், தேர்வுநிலை கூட்டுறவுத் தணிக்கை அலுவலரின் வாரிசுதாரர் திருமதி.தி.எழில்சிந்து என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 01.12.2004ல் விண்ணப்பித்த மனு திருவள்ளூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநரால் பரிந்துரை செய்யப்பட்டு, உரிய இணைப்புகளுடன் 07.07.2005–ல் கூட்டுறவு தணிக்கை இயக்ககத்தில் பெறப்பட்டது.

ஆ) திருமதி.தி.எழில்சிந்து தனக்கு பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். இளநிலை உதவியாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில் மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி பரிசீலிக்கப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணையின் வழி

திருமதி.தி.எழில்சிந்து அவர்கள் கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் தமிழ்நாடு அரசுபணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்- 2016 பிரிவு 28(1)-ன்கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டு, சென்னை மண்டல கூட்டுறவுத் தணிக்கை இணை இயக்குநர் அலுவலகத்தில் பணியமர்வு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து தனியர் 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

இ) தனியரின் பிறந்த தேதி 25.01.1988 ஆகும். இவருக்கு இளநிலை உதவியளாராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட நாளில் 32 வயது நிறைவு பெற்றவராக உள்ளதால் இவரது வயது அரசு நிர்ணயித்த வரம்பிற்குள் உள்ளது.

ஈ) தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது வரை ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவழக்கு ஏதும் நிலுவையில் இல்லை.

உ) மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், திருமதி.தி.எழில்சிந்து அவர்கள் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

2. **அரசு**, கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன், கவனமுடன் ஆய்வு செய்து, மேலே ஐந்தாவது மற்றும் ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி, சென்னை மண்டல கூட்டுறவுத் தணிக்கை இணை இயக்குநர் அலுவலகத்தில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.தி.எழில்சிந்து என்பவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் **09.10.2019** முற்பகல் முதல் அவரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால் தனியர், ஊதிய உயர்வு மற்றும் நிலுவைப் பணப்பயன்களைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.உதயச்சந்திரன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
திருமதி.தி.எழில்சிந்து, இளநிலை உதவியாளர்.
(கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் வழியாக)
கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை-35.
(அனைத்து அசல் சான்றிதழ்களுடன்)

**நகல்**
மனிதவள மேலாண்மை (ஜி)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-09.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

**//ஆணைப்படி : அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்
06/11/2023